بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# SPEECH OF THE KHALIFATHULLAH

## Hazrat Munir Ahmad Azim (A)

**17 January 2017 (17 Rabi'ul Aakhir 1438 AH)**

"NOORUL ISLAM" Masjid, Mathra, Kerala, India



## Zikr'ullah/ இறை தியானம்/ Remembrance of Allah

ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம்(அலை) அவர்களின் இந்தியா சுற்றுப்பயணத்தின் போது, கேரளா மாநிலத்தை சார்ந்த மாத்திரை **"நூறுல் இஸ்லாம்"** மஸ்ஜித்தில் வைத்து இறை தியானம் என்ற விஷயத்தை அடிப்படையாக்கி கொண்டு ஆங்கில மொழியில் ஆற்றிய சிறப்பு மிக்க பேருரையின் தமிழாக்கம்.

**அ**ன்பு தோழர்களே, உண்மையைத் தேடுவோர்களே, எல்லாம் வல்ல இறைவன், அவனது அருள் கொடைகளும் சாந்தியும் உங்களனைவரர்கள் மீதும் பொழியட்டும்.

எல்லாம் வல்ல இறைவனை நினைவு கோருவதைக் குறித்து அல்லாஹ்விடமிருந்து நான் பெற்றுக் கொண்ட வெளிப்பாடுகளிலிருந்து ஒன்றை தேர்ந்தெடுத்து உங்கள் மத்தியில் விவரித்து கொள்கின்றேன். (அரபி மொழியில் இறைவனின் தனிப்பட்ட முறையிலான பெயர் அல்லாஹ் என்றாகும் அதன் சொற்பொருள் (meaning of a word) பங்காளிகளில்லாதவன், இணையற்றவன் என கூறலாம்.) அவன் நாமம் பரிசுத்தமாகும். அவன் முற்றிலும் வல்லமையுடையவனாகவும் அனைத்து படைப்பினங்களுக்கும் அப்பாற்பட்டவனாகவும் இருக்கின்றான்.

**“யா அல்லாஹ்!”** உன் அருள் கொடைகளை முஹம்மது(ஸல்) அவர்கள் மீதும், அன்னாரின் குடும்பத்தாரின் மீதும், தோழர்களின் மீதும், பொழிவாயாக! அவர்களையாவும் எந்நேரமும் அமைதியின்பால் நிலை நிற்கச் செய்வாயாக! அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கு மட்டுமாகும். அடைந்து போன இதயங்கள்யாவும் அவனை குறித்த சிந்தனைகள் வழியும் அவனது நாமத்தை நினைவு கொள்தல் மூலமும் மெதுவாக மெதுவாக திறந்துக் கொள்கின்றது.

இப்பூவுலகில் நிலைநிற்பதில் வைத்து மிக பெரிய விஷயம் என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வை நினைவு கொள்தலேயாகும்.

நிச்சயமாகவும் மோட்சத்திற்கான திறவுகோல்(key) என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வை நினைவுகொள்தலேயாகும். அல்லாஹ்வின் அருள் கொடைகளால் ஆன்மாவுக்கு வெளிச்சம் பகிர்கின்ற விளக்காகவும் ஒளியாகவும் திக்கிர் திகழ்கின்றது. மட்டுமல்லாமல் நம்மை வள்ளல் மனமுடையவராக்கிப்பரிணமிக்கச் செய்வதும் நமக்கு வெற்றிவாயினை சூட்டித்தருவதும் அதுவேயாகும். அல்லாஹ்வின்பால் எட்டிக் கொள்வதற்கான பாதையின் அடிப்படை என்பது அல்லாஹ்விடமான தியானமாகும். அல்லாஹ் இருக்கின்றான் என்ற உண்மையினை உணர்ந்த புத்திசாலிகள், இறுகபிடிக்கும் கோட்டையும் அதுவேயாகும்.

இறைவனை நினைவுகூருவதன் வாயிலாக அறிவீனத்திலிருந்தும், நினைவின்மையிலிருந்தும், சோம்பலிலிருந்தும் நாம் மீட்சியை பெற்றுக்கொள்கின்றோம். என்று மட்டுமின்றி உண்மையின் பாலும் நேர்மையின்பாலும் நம் இதயத்தின் கவனத்தை சதாநேரமும் அது நிலை நாட்டிக்கொள்ளவும் செய்கின்றது. இந்த “திக்கிரை” நமக்கு இவ்வாறு விளக்கிக் கொள்ளலாம். அதாவது நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் ஒன்றின் பெயரினை சதா நேரமும் இதயத்தாலும் நாவாலும் மேலும் மேலும் எண்ணிக் கொள்தலாகும் அது. நாம் அல்லாஹ்வை நினைத்துக் கொண்டிருந்தால் அல்லது அவனின் ஏதேனும் ஒரு தன்மையின் அடிப்படையில் அவனை எண்ணிக்கொண்டிருந்தால்,

அதுமல்லது அவனின் அற்புதமான ஒரு பண்பைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தால், இவ்வகையில் ஏதேனும் ஒன்றை குறித்த தியானத்தில் இருக்கும் பொழுது இவையாவும் அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றை அல்லது இவற்றை திக்கிர் என கூறலாம். அல்லாஹ்வை நினைவு கொள்ளுதல், இறைவணக்கமாக பரிணமிக்கின்றது. அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எண்ணிக் கொண்டிருந்தாலும் சரி, அவனது நபிமார்களை நினைவு கூறிக் கொண்டிருந்தாலும் சரி, அவனது சூபியாக்களை ஞாபகம் கொண்டிருந்தாலும் சரி, அல்லது அல்லாஹ்விடம் திட பந்தம் வைத்திருப்போர்களை நினைத்துக் கொண்டிருந்தாலும் சரி, அதுமல்லது அல்லாஹ்விடம் நெருக்கமாகயிருப்போர்களை குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தாலும் சரி, இவையாவும் “திக்கிறில்” உட்படுகின்றது. மட்டுமின்றி இந்த நினைவு கூறுதல் ஒரு செயல் வடிவிலுமாகலாம். அதாவது திருக்குர்ஆன் ஓதிக் கொள்வதும், ஒரு கவிதை படித்துக் கொள்வதும், அல்லது ஒரு வரலாறு நிகழ்வை வாசித்துக் கொள்வதுமாகலாம். ஆனால் அதற்கு அல்லாஹ்வின் மதவுமாக தொடர்பிருக்க வேண்டும் என்று மட்டும். திக்கிர் என்ற வார்த்தையின் விரிவான விளக்கத்தின் அடிப்படையில் உறுதியாக நமக்கு கூறிக் கொள்ளலாம், ஒரு இறையாராட்சியாளர் அதாவது தெய்வீக ஞானங்களை பெற்றுக் கொள்ள விருப்பமுடைய ஒரு நபர் அவர் ஒரு முஸ்லீம் கர்மசாஸ்த்திர (பிக்) நிபுணர் (என எண்ணுவோம்). அவர் புரியும் அனைத்துச் செயல்களும் இறை சிந்தனைகளைக் கொண்டு குவிந்திருக்கும். அவர் அல்லாஹ்வின் விரிவான மனதைக் குறித்தும், அவன் மகத்துவத்தைக் குறித்தும் அவனது முழுமை வாய்ந்த வல்லமையைக் குறித்தும், அத்தோடு ஆகாய-பூமிகளில் பிரதிபலிக்கும் அவனது அடையாளங்களைக் குறித்தும் ஆழமான சிந்தனையில் மூழ்கின்றார். அவர் அல்லாஹ்வைக் குறித்த சிந்தனையில் நிறைந்திருக்கின்றார். அத்தோடு அவர் அல்லாஹ்வின் கட்டளைகளை நம்பிக்கையோடு ஆராய்ந்து கொள்பவராகவும் இறை வேண்டுகோள்ப்படி தடைவிதிக்கப்பட்ட விஷயங்களிலிருந்து விலகி கொள்பவராகவும் இருக்கின்றார். என்று மட்டுமின்றி அவர் தம் இதயத்திற்கு விருப்பமுடையதாக அல்லாஹ்வின் நாமத்தை இணைந்து வைத்துக் கொள்ளவும் மிக தீவிர உணர்ச்சியுடன் அல்லாஹ்வை நினைவு கொள்ளவும் செய்கின்றார். அவரின் ஒவ்வொரு சுவாசங்களிலும் அது (இறை எண்ணம்) பிரதிபலித்துக் கொள்ளவும் செய்கின்றது.

நாவாலும் இதயத்தாலும் அதைப்போன்றே மற்று உடல் உறுப்புகளாலும் ஒருவருக்கு இறை எண்ணத்தின் பால் நுழைந்துவிடலாம். அவருக்கு இரகசியமாகவும் பரசியமாகவும் சுயம் இறையெண்ணத்தின்பால் பிரவேசித்துக் கொள்ளலாம். ஆனால் ஒருவர் எல்லா வகையிலும் சுயம் திக்கிறில் அதாவது இறையெண்ணத்தில் நுழைந்து விடும் பொழுது அது வாயிலாக அவர் இறையெண்ணத்தை அதன் பரிபூரணமான நிலையில் எட்டவைக்கின்றார். நாவினால் மட்டும் திக்கிறில் நாம் ஈடுபட்டிருக்கும் பொழுது, மன கட்டுபாடின்றி அல்லாஹ்வின் பெயரை கூறிக் கொள்கின்றோம் என அதிலிருந்து நமக்கு உணர முடியும். இதை வெளிப்படையான திக்கிர் (இறைவனை நினைவு கூறுதல்) என்று

நமக்கு கூறிக் கொள்ளலாம். குர் ஆனுடையவும் ஹதியுடையவும் அதைப் போன்றே என் தனிப்பட்ட முறையிலான நோக்கத்தினுடையவும் அடிப்படையில் இந்த வெளிப்படையான திக்கிறுக்கும் மிக முக்கியத்துவமும், பெரிய விலையும் நிலையும் இருக்கின்றது.

திக்கிறை (இறை எண்ணம்) இரண்டு வகையாக நமக்கு பிரித்துக் கொள்ளலாம். ஒன்று இடத்தினுடையவும் நேரத்தினுடையவும் அடிப்படையில் மிதப்படுத்திச் செய்யும் திக்கிர். வேறொன்று இடத்திற்கும் நேரத்திற்கும் அப்பாற்பட்ட வகையில் செய்யும் திக்கிர்.

முதலாவது, இடத்திற்கும் நேரத்திற்கும் ஏற்றவாறு மிதப்படுத்தி செய்யும் “திக்கிர்”. அதாவது 5 வேளை தொழுகை, மக்கா பயணம், தூங்கிக் கொள்வதற்கு முன்னவே செய்யும் திக்கிர், தூக்கத்திலிருந்து எழும்பும் பொழுது செய்யும் திக்கிர், உணவுக்கு முன்னவே செய்யும் திக்கிர், வாகனத்தில் நுழைவதற்கு முன்னவே செய்யும் திக்கிர் போன்றவைகள் அதில் உட்படுகின்றது.

இரண்டாம் பிரிவினை சார்ந்த திக்கிர் என்பது இடத்தைக் கொண்டும் நேரத்தைக் கொண்டும் மிதப்படுத்திக் கொள்ளாத திக்கிர். (அதாவது அது உங்கள் ஆன்மீக நிலையாகும்) அவ்வகையான திக்கிறுகள், இறைபுகழ் கீர்த்தனங்களாகும். அதாவது **“சுப்ஹானல்லாஹ்”** (அல்லாஹ்வின் பரிசுத்தியை புகழ்ந்துக் கொள்தல்) **“அல்ஹம்துலில்லாஹ்”** (அனைத்து புகழும் அல்லாஹ்விற்கு மட்டும் அர்பித்துக் கொள்தல்) **“லா இலாஹ இல்லல்லாஹ்”** (அல்லாஹ்வின்றி வணக்கத்திற்குரியவன் மற்றெவருமில்லை) **“அல்லாஹ் அக்பர்”** (முற்றிலும் பெரியவன் அல்லாஹ் மட்டுமாவான்) **“லா ஹளலா வலா குவ்வத்தே இல்லாபில்லாஹில் அளியில் அஸீம்”** (அல்லாஹ் வழியல்லாமல் மற்றொரு அதிகாரமும் வேறு இல்லை)

இப்பிரிவினில் திருக்குர் ஆனில் கூறப்படும் பிரார்த்தனைகளையும் உட்படுத்திக் கொள்ளலாம். மட்டுமின்றி நபி மீது “சலாத்” கூறிக்கொள்தல், அதைப்போன்றே தனிப்பட்ட முறையிலான பிரார்த்தனைகளையும் அதில் உட்படுத்திக் கொள்ளலாம். இவ்வகையிலான திக்கிறுகள் (இறையெண்ணங்கள்) மக்களின் மனதில் மிக பெரிய ஈர்பை உருவாக்கி கொள்பவையாகும். இந்த ஆன்மீக போதனைகளை கடைப்பிடித்துக் கொள்வதன்வழி, அவர் எவரிடத்தில் பிரார்த்தனையை சமர்பிக்கின்றாரோ அந்த நபருமாக ஆழமான நெருக்கம் அவருக்கு அனுபவிக்கயியலும். இவ்வகையான திக்கிறுகள் அவர்களின் இதயங்களில் அழமாக ஈர்ப்பை ஏற்ப்படுத்திக்கொள்ளவும், கண்ணியமான நிலையை அவர்கள் எட்டிக் கொள்வதோடு இறையச்சத்தால் அவர்கள் சுயம் கட்டுப்பட்ட நிலையை அடையவும் செய்கின்றனர்.

மட்டுமின்றி இரண்டாம் பிரிவினில் நமக்கு இதைக்கூட உட்படுத்திக் கொள்ளலாம். அதாவது அந்நிலையை மிக நுட்பமான நிலை என கூறிக்

கொள்ளலாம். அதாவது மிக நுட்பமான நிலையில் நாம் உன்னதமான உண்மைகளைக் குறித்து சிந்திக்கின்ற நேரங்களில் அதாவது **"அல்லாஹ் என் கூடவேயிருக்கின்றான்" "அல்லாஹ் என்னை பார்த்துக் கொண்டிருக்கின்றான்"** அல்லது **"அல்லாஹ் என்னை கவனித்து பார்த்துக் கொண்டேயிருக்கின்றான்"** இதை பல்வேறு சூழ்நிலைகளின் அடிப்படையில் நமக்கு விளக்கிக் கொள்ளலாம்.

திக்கிர் என்பது, எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் நம் உண்மையான பந்தத்தை உருவாக்கி கொள்வதற்கு போதுமான ஆற்றல் வழங்கிக் கொள்ளும் ஒன்றாகும். நிச்சயமாகவும் திக்கிர் என்பது அசாதாரணமான ஆற்றலை அளித்துக் கொள்பவையாகும். அல்லாஹ்விடம் எவ்வாறு நாம் நடந்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு உகுந்த வகையிலான ஒழுக்கத் தன்மையை பெற்றுக் கொள்வதற்கும், அத்தன்மையை திடப்படுத்திக் கொள்வதற்கும் நிலைநாட்டிச் செல்வதற்கும் திக்கிர் அவசியமாகும். அல்லாஹ்வின் நினைவிலிருந்து விட்டு விலகாமலிருப்பதற்காக ஆற்றல்வாய்ந்த பாதுகாவலை அளிக்கும் அசாதாரணமான ஒன்றாகும் திக்கிர். திக்கிர் நம் சோம்பலை அழித்துக் கொள்கின்றது. தீமைக்கு எதிரான ஒரு உதவிகோட்டையாகவும் அது திகழ்கின்றது. தொழுகை நேரங்களில் அசாதாரணமான துணையினை அது பகிர்ந்து கொள்வதோடு நம் கவனத்தையனைத்தும் அத்தொழுகையின் மீது வைத்துக் கொள்வதற்காக உதவியும் அது புரிகின்றது.

திக்கிர் வழியாக ஒரு குறிப்பான பிரதிபலன் கிடைக்காமலேயில்லை. ஏனெனில் திக்கிறுமாக அது (பிரதிபலன் கிடைத்தே வேண்டும் என்பது) இணைந்திருக்கின்றது. நீங்கள் சுயம் எவ்வகையிலான திக்கிறில் நுழைந்தாலும் சரி, உங்களுக்கு ஒரு விருப்பம், ஒரு ஆற்றல், சில பிரத்தேகமான நல்லொழுக்கத்தன்மைகள் போன்றவை பிரதிபலனாக கிடைத்து விடுகின்றது. மிக நுட்பமான முறையில் நீங்கள் திக்கிரில் ஈடுபட்டிருந்தால், அதன் பிரதிபலனாக ஒரு பிரகாசம் உங்களுக்கு கிடைத்துவிடுகின்றது. ஆனால் உங்களின் அத்திக்கிர் அதற்கு போதுமான நிலையினை அடைந்திருக்க வேண்டும் என்று மட்டும்.

திக்கிர் என்பது ஒரு உள்படையான உண்மையாகும். ஏதொன்றில் நாம் நுட்பமான எண்ணத்தை வைத்திருக்கின்றோமோ அதாவது நம் சிந்தனை எவர்மீது இருக்கின்றதோ அது அல்லாஹ்வின் மீது (என்று எடுத்துக் கொள்வோம்). அந்நிலையில், நம் சிந்தனையிலிருக்கும் அல்லாஹ் நம் இதயத்தின் உரிமையாளராக மாறுகின்றான். அந்நிலையினை நாம் அடையும்பொழுது, அந்நேரத்தில், இவ்வுலகை சார்ந்த நம் தொடர்பு முழுமையாக துண்டித்ததைப்போன்று நாம் அனுபவித்துக் கொள்கின்றோம். நம் நிலை நிற்ப்பே அழிந்துபோனதாக நாம் பட்டறிகின்றோம். அதாவது நம் நிலைநிற்ப்பே இல்லாமல் போய்விட்டது என்று கூறிக்கொள்வதே சரி. திக்கிறின் ஆழங்களை நாம் அடையும் பொழுது நம் இதயத்தில் ஒரு விதை உற்ப்பத்தியாகின்றது. ஒன்றுக்குமேல் ஒன்று என்ற நிலையில் மூன்று புறம் தோடுகளைக் கொண்டு அந்த விதை மூடப்பட்டிருக்கின்றது. நம் இதயம் இந்த மூன்று புறம்தோடுகளுக்குள்

இருக்கின்றது. ஆனால் நமக்கு இதயவுமாக தொடர்பு கொள்ளவேண்டுமென்றால் இந்த மூன்று புறந்தோடுகளையும் தாண்டிச்செல்ல வேண்டும். இந்த புறம் தோடுகளுக்கும் முக்கியத்துவம் இருக்கின்றது.

நாவால் மட்டுமான திக்கிர் புறம்தோடாகும். எவர் ஒருவர் சுயம் திக்கிறின்பால் நுழைய விரும்புகின்றாரோ அவர் நிச்சயமாகவும் நாவால் ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். மகிழ்ச்சியுடனும் ஒருமனதாகவும் இதயம் திக்கிரின்பால் பிரவேசித்துக் கொள்வதற்கு தேவையான முயற்ச்சிகளை அவர் மேற்க்கொள்ள வேண்டும். இறையெண்ணத்தின்பால் கவனம் முழுமையாகவும் இருக்கின்றது என்பதற்கு இதயம் சாட்சியம் அளிக்க வேண்டும். இதயத்தை அதன் வழிக்கு செல்ல நாம் அனுமதித்தால் அது கற்பனையுலகில் நடமாடிக்கொள்ளும். அதன் வாயிலாக நிச்சயமாகவும் (திக்கிறிர்) தவறுகள் நிகழ்ந்திடும். ஆகவே நம் சிந்தனைகளை, திக்கிர் பின் தொடர்ந்துச் செல்ல வேண்டும். அதாவது நாவு பின்பற்றுகின்ற விஷயத்தை இதயம் ஏற்றுக் கூற வேண்டும். அந்நிலையில் அனைத்துவிதமான தீமைகளையும் தீய விருப்பங்களையும் இதயத்தின் ஒளி எரித்துக் கொள்ளவும் செய்கின்றது. மட்டுமின்றி மெதுவாக மெதுவாக இதயத்தில் திக்கிர் பலம் வாய்ந்ததாக மாறிடவும், மேலும் இதயத்தின் முழு அதிகாரத்தையும் அது கையாண்டுக் கொள்ளவும் செய்கின்றது. மேலும் நாவால் மட்டுமான திக்கிர் ஆற்றலையிழக்கவும், ஆன்மாவும் உடலும் பிரகாசத்தால் நிறைந்து கொள்வதோடு இதயம் தூய்மையைப் பெற்றுவிடவும் செய்கின்றது. அதன் விளைவாக இறைவனிடமிருந்துள்ளவையை தவிர்த்து, வேறு அனைத்தையும் அது நிராகரித்துக் கொள்ள ஆயத்தமாகின்றது. இப்பதவியை நாம் அடைந்துவிட்டால் தீமையின்பால் தூண்டிக்கொள்ளும் அவர்களின் ஆற்றல்கள் பலவீனமடைந்து கொள்ளவும் தீமைக்கு எவ்வித இடமும் அவர்களின் இதயத்தில் இல்லாமல் போய்விடவும் செய்கின்றது. மேலும் இதயம் தூய்மையான கண்ணாடியைப்போன்று சீரமைந்து விடவும் இறைதூண்டுதலின் இடமாக இதயம் பரிணமித்துவிடவும் செய்கின்றது. பின்னர் அங்கு இறைவெளிப்பாடுகளும் மிகப் பெரிய ஞானங்களும் பிரதிபிம்பிக்கின்றது. இறையெண்ணம் (திக்கிர்)முழு இதயத்தையும் கீழ்படியச்செய்வதோடு உடம்பின் ஒவ்வொரு பகுதியும் அத்திக்கரில் அலிந்து விடுகின்றது. ஆன்மீகமாக எந்த நிலையை நீங்கள் அடைந்திருக்கின்றீர்கள் அந்த அளவிற்கு உங்கள் நிலையும் பரிணமித்துவிடும்.

திக்கிர் என்பது ஒரு “அக்கினி” போன்றாகும். அது ஒரு இடத்தில் மட்டுமாக நிற்கவோ பரவிக்கொள்ளாமலிருக்கவோ செய்வதில்லை. அக்கினி ஒரு வீட்டில் நுழைந்துவிட்டால் “இது எனக்குரியதாகும்” என்று கூறிக்கொண்டு (அதாவது “அல்லாஹ்வன்றி வேறொரு இறைவன் இல்லை” என்று கூறுவது போன்று) வீடு முழுவதும் பரவி விடுகின்றது. மரத்துண்டுகளோ வைக்கோலோ இருந்தால் அது கரிந்துப் போகின்றது. தீ படர்ந்து கொள்கின்றது. அககினி இருளை பார்த்தால் அந்த இருளை பிரகாசமாக பரிணமிக்கச் செய்கின்றது. அதைப்போன்றே திக்கிர் ஒரு ஒளியாகும். அது நம்மனையினை முழுவதும் ஒளிரச் செய்கின்றது.

மனைக்குள் ஏற்கனவே பிரகாசமிருந்தால் கூட அந்த திக்கிர் நுழைவதன் காரணமாக பிரகாசத்திற்கு மேல் பிரகாசத்தை அது அளித்துக்கொள்கின்றது.

ஒன்றுக்கொன்று ஒப்பிட்டு கூறிக்கொண்டால், இவ்விஷயத்தை ஒரு சரீரத்தோடு உவமைப்படுத்தி விளக்கிக்கொள்ள முடியும். "திக்கிர் ஹலாலானதை ஹறாமாக்குவதில்லை". கட்டுபாடுயில்லாமையின் விளைவாகவும் அதாவது ஹறாமான உணவை புசித்ததன் வாயிலாக உடம்பில் தோன்றும் அசுத்தங்களையும் அழுக்குகளையும் திக்கிர் நீக்கி கொள்கின்றது. நமக்கு அனுமதிக்கப்படாத விஷயங்களையாவும், திக்கிற் அழித்துக் கொள்ளும் பொழுது நம் சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பும் திக்கிரில் பங்காளியாகின்றது.

திக்கிர் முதலாவதாக இடம்பிடித்துக் கொள்வது மனதின்பாலாகும். அதன் வாயிலாக உடம்பின் இப்பகுதியின் (மனதின்) ஓசையை, அதாவது நீங்கள் (ஆன்மீகமாக) அனுபவித்திட ஆரம்பித்துக் கொள்வீர்கள். கைமணியுடையவும் தவில் வாத்தியத்தினுடையவும் ஒலியைப் போன்று! திக்கிறுக்கு தனதான ஒரு ஆற்றல் இருக்கின்றது. திக்கிர் (ஒருவரில்) ஒரு இடத்தில் நுழைந்துக் கொள்ளும் பொழுது அங்கு (ஆன்மீகமாக) தவில் வாத்தியத்தினுடையவும் கைமணியுடையவும் ஒலியை எழுப்பிக்கொள்கின்றது. உண்மையைத்தவிர மற்று அனைத்தையும் அது எதிர்த்துக் கொள்கின்றது. திக்கிர்(ஒருவரில்) அல்லது ஒரு இடத்தில் இடம் பிடித்தால் எல்லாவித இழிவானதையும் வெளியேற்றிக் கொள்ள அது தீவிரமான முயர்ச்சியை மேற்கொள்கின்றது. அக்கினியை தண்ணீர் கெடுத்துக் கொள்வதைப்போன்று அனைத்து வகைப்பட்ட தீய சத்தங்களையும், அழுக்குகளையும் திக்கிர் கெடுத்துக் கொள்கின்றது. நீர் குத்தொழுக்கினுடையவும், இனிமையாக வீசியடிக்கும் தென்றலுடையவும் மரயிலைகளுடையவும் சத்தங்கள் கேட்பதைப் போன்று! (அனைத்து தீமைகளும் அழித்துக் கொள்கின்றது)

மனிதன், அனைத்துவித மூல அம்சங்களைக் கொண்டு ஒன்றிணைக்கப்பட்ட உருவமாகயிருக்கின்றான். மேன்மையானதும் இழிவானதும் ஆன விஷயங்கள் மனிதனின் அந்த மூல அம்சங்களில் உட்படுகின்றது. தண்ணீர், வாயு, ஆகாயம், பூமி போன்றவைகளிலிருந்தெல்லாம் ஒலிகள் எழும்புகின்றது. இச்சத்தங்களை உணர்ந்து கொள்பவன், ஆற்றல் வாய்ந்த ஏக(இறை) சிந்தனையுடனும் தன்னம்பிக்கையுடனும் அல்லாஹ்வை புகழ்கின்றான். **"அல்லாஹ் தூய்மையானவன்" என.** இந்நிலையினை அடையும் பொழுது அந்த அடியான் நாவால் செய்யும் திக்கிறை முடித்துக் கொள்கின்றான். அதற்கு பதிலாக அவர் இதயம் திக்கிரில் பரிபூரணமாக மூழ்கி விடுகின்றது. ஒரு தாயின் வயிற்றுக்குள் இருந்து குழந்தை சலிப்பதை போன்று!

அல்லாஹ்விடமும் அவனது தூதர் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களிடவுமான நம் அன்பின் புகழ் இடமாகும் இதயம். அந்த இதயத்தை மேலும் நன்கு படுத்திக் கொள்ள வழிவகுக்கும் ஒன்றாகும் திக்கிர். இதயம்

விரிவாகிக் கொள்ளும் பொழுது, அது ஆற்றலுடையதாக பரிணமித்துக் கொள்ளும் பொழுது, உண்மையை அறிந்துக் கொள்வதற்கான ஒரு தன்னம்பிக்கை அதில் முளைத்து, வளர்ந்து கொள்கின்றது. இச்சூழ்நிலையில் தம் இலட்சியமும் நோக்கயிடமும், தாம் செல்லும் வழியும் அல்லாஹ்விடம் என அவர் உணர்ந்து கொள்கின்றார். இதயத்தின் திக்கிர் என்பது தேனிக்களின் ஓசையைப் போன்றிருக்கும். அதன் சத்தம் மிக சிறியதுமல்ல மிக பெரியதுமல்ல. அந்த திக்கிர் வாயிலாக, நாம் எவர் ஒருவரை எண்ணிக் கொள்கின்றோமோ அவன் (அல்லாஹ்) நம் இதயத்தின் உரிமையாளராக மாறிவிடுகின்றான்.

நான் என்ற எண்ணத்தை முற்றிலும் அழித்துக் கொள்ளுகின்ற ஒரு நிலை (திக்கிர் வாயிலாக அடைய முடிகின்றது) அவரைக் குறித்தனைத்தையும் சுயம் மறந்து விட்டு திக்கிர் என்ற இலட்சியத்தில் மட்டும் கவனம் வைத்து, அவரின் நிலை நிற்பே இல்லாமல் போகும்(Fana) அளவிற்கு அவர் செல்லுகின்றார். தன் உடலளவிலான பட்டறிவையும் சுற்றுப்புற அனுபவங்களையும் பகுத்தறிய அவருக்கு இயலாமல் வருகின்றது. அவரை படைத்தவனை இலட்சியம் வைத்துள்ள பயணத்தின் முதல் நிலையை அதுவாயிலாக அவர் அடைகின்றார். மேலும் அதைக் குறித்த சிந்தனையிலையே அவர் மூழ்கியிருக்கின்றார். சுயம் தன்னை மாய்ந்துக் கொள்ளும் உன்னதமான நிலை(Fana)யை சென்றடைவதற்கு! இதுவேயாகும் அந்த பயணம்! வேறொருவகையில் கூறிக் கொண்டால் எல்லாம் வல்ல இறைவனின்பாலான பயணம். அதற்கு பிறகே அல்லாஹ்வில் இருந்துள்ள மார்க்கதரிசனம் கிடைத்துக் கொள்வது. அல்லாஹ்வின் நண்பராகிய இப்ராஹீம்(அலை) அவர்கள் விளக்கியதைப் போன்று, அதாவது **நான் என் இரட்சகனிடம் செல்கின்றேன். அவன் எனக்கு மார்க்கவழி காட்டுவான்.** (சூரா 37 வசனம் 100)

முழுமையாகவும் ஏக(இறை) சிந்தனையின்பால் மூழ்கியிருக்கல் என்பது அபூர்வமாக மட்டும் இயலும் ஓர் விஷயமாகும். ஒருவர் சுயம் திக்கிரில் மூழ்கி கொண்டால், அவர் அந்த முயர்ச்சிகளை நிரந்தரம் தொடர்ந்துக் கொண்டால் ஆற்றல் மிக்க ஒரு நல்லொழுக்க தன்மை அவருக்கு சுயம் பெற்றுக்கொள்ள முடிகின்றது. அந்த நல்லொழுக்க தன்மையை தம்மிடம் நிலை நிற்க செய்ய முடிவதோடு அந்நபருக்கு உன்னதமான உலகினை அடைந்து விடவும் முடிகின்றது. இந்த ஏக(இறை) சிந்தனையின்பால் அவர் மூழ்கி கொள்கின்ற நிலையில் உண்மையானவனும் தூய்மையானவனுமாகிய அல்லாஹ்வை அவருக்கு தரிசித்துக் கொள்ள முடிகின்றது. அதை அவருக்கு அனுபவித்துக் கொள்ளவும் இயலுகின்றது. அத்தோடு இறை தூய்மையும் அவன் முன் வெளிப்பட்டுக் கொள்கின்றது.

மலக்குகளின் உண்மை, ஜின்னுகளின் உண்மை, நபிமார்களுடையவும் புண்ணியாத்மாக்களுடையவும் ஆன்மாக்களுடையவும் இரகசியங்கள் போன்றவைகள் திக்கிரில் ஈடுபட்டுக் கொள்பவருக்கு முதலில் வெளிப்பட்டுக்

கொள்ளும் விஷயங்களாகும். இவையாவும் அழகான வடிவில், இவற்றின் சில உண்மைகள் அவருக்கு காட்சியளிக்கப்படுகின்றது. இது முதல் கட்டம் மட்டுமாகும். ஆனால் அவர் இவ்விஷயங்களை எவ்வாறு உணர்ந்துக் கொள்கின்றார் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகயிருக்கின்றது. அது எல்லா நிலையிலும் இயற்கைக்குட்பட்ட விதத்தில் வெளிப்பட்டு கொள்கின்றது. அனைத்து விஷயங்களுடையவும் உண்மைகருத்தை உட்கொள்ளயியலுகின்ற நிலையில் அது அவரை கொண்டுசெல்கின்றது.

திக்கிரின் உண்மையான பலன் என்ன என்பதை சுருக்கமாக இவ்வாறு விளக்கிக் கொள்ளலாம். இதன் ஆரம்பம் நாவால் மட்டுமிருந்தாலும், அதைத் தொடர்ந்து இதயமும் திக்கிரில் நுழைகின்றது. நாவிலிருந்து இதயத்தையடைய மிக அதிகமான உழைப்பு தேவையாகயிருக்கின்றது. அதை தொடர்ந்து இதயத்தால் ஆன திக்கிர் தானாகவே உருவாகின்றது. அதைத் தொடர்ந்து இதயத்தின் உரிமையாளராக அல்லாஹ் மாறிவிடுகின்றான். மட்டுமின்றி எவர் ஒருவர் திக்கிரில் ஈடுபட்டிருக்கின்றாரோ அவர் முழுமையான நிலையில் அழிந்துக் கொள்கின்றார். தூயதூதர்(ஸல்) வின் கதீஸிலிருந்து தெரிய வருகின்ற ஒரு உண்மை இதுவாகும். அன்னார் கூறுகின்றார் **“சொர்க்கத்தின் தோட்டத்தில் கொண்டாடிக் கொள்ள விரும்புகின்றோர்கள் மேலும் மேலும் அல்லாஹ்வை நினைவு கூறிக் கொள்வோராக இருக்க வேண்டும்”.** வேறு ஒரு நபி வசனத்தில் காணலாம். **“இரகசியமாக செய்யும் திக்கிர் அது மறைந்து இருக்கின்றது. மலக்குகள் கேட்கின்ற திக்கிரைவிட எழுபது மடங்கு அது மேன்மையுடையதாகும்.”**

திக்கிறில் ஈடுபட்டுக் கொள்ளும் நபர், அத்திக்கிர் மூலமாக தம்மை அழித்துக் கொள்ளும் நிலையை அடையும் பொழுது, அவர் உள்படையான இரகசியங்களின் ஆழங்களை சென்றடைகின்றார். அதற்கான சான்று, இறையெண்ணம் வாயிலாக அவரின் உள்நிலை பரிபூரணமாகவும் பரமானந்தத்தின் கோட்டையை அடைந்துக் கொள்ளவும், முழுமையாக அவர் அந்த அனுபவங்களில் மூழ்கிவிடவும் செய்கின்றார். அதன் மற்றொரு அடையாளம் என்பது, ஒருவர் தம் திக்கிரை தவிர்த்துக் கொண்டால் கூட திக்கிர் அவரை கைவிடுவதில்லை. திக்கிர் அவரை பின்தொடர்ந்து செல்கின்றது. அதாவது இந்நிலையை, திக்கிரின் மிக உன்னதமான நிலை என கூறிக்கொள்ளலாம். இந்நிலையில் அவர் உண்மையான இறைவனின் அருகாமையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். விரக்திக்கோ பொய்மைக்கோ அவரை அந்நிலையிலிருந்து நீக்கிக்கொள்ள முடிவதில்லை. மற்றொரு அடையாளம் என்பது, உங்களின் உடலும் மனதும் சங்கிலிகளால் கட்டப்பட்டதைப் போன்று நீங்கள் அனுபவித்துக் கொள்வீர்கள். அது மட்டுமின்றி இதன் ஒளி ஒரு பொழுதும் கெடுவதில்லை. ஆன்மீக பிரகாசம் ஒரு பொழுதும் அழிந்துக் கொள்வதுமில்லை. எல்லா வேளைகளிலும் இறையொளியின் உதயத்திற்கு நீங்கள் சாட்சிகளாகயிருப்பீர்கள். மற்று தேவையற்ற ஒளிகள்யாவும் நீங்கிக் கொள்வதை நீங்கள் பார்த்துக்

கொள்வீர்கள். அதைப் போன்றே உங்களை சுற்றி தூய்மையும் நேர்மையுமான ஒரு அக்கினியின் சூடு இருப்பதாக நீங்கள் அனுபவித்து விடுவீர்கள். ஒரு நபரின் உயிரின் எல்கையில் திக்கிர் சென்றடையும் பொழுது அந்நேரம் திக்கிர், நம் நாவை துளைத்து செல்லும் ஒரு ஊசி போன்று பரிணமிக்கின்றது. அது வாயிலாக ஆற்றல் வாய்ந்த ஒரு ஒளி தன்னை சுற்றி பரவிக் கொள்வதாக அவர் அனுபவித்துக் கொள்கின்றார்.

**இறைதியானமும், 3- வகைப்பட்ட ஆன்மாக்களும். ஆன்மாக்கள் மூன்று வகை உள்ளன.**

1. **அன்ந.்.ப்சுல் அம்மாரா : தீமையின் பால் தூண்டிக் கொள்ளும் ஆன்மா.**
2. **அன்ந.்.ப்சுல் லவ்வாமா : சுயம் குற்றம் சாட்டும் ஆன்மா.**
3. **அன்ந.்.ப்சுல் முத்மயின்ன : சாந்தியடைந்த ஆன்மா**

## 1. அன்ந.்.ப்சுல் அம்மாரா : தீமையின் பால் தூண்டிக் கொள்ளும் ஆன்மா :

தவறின்பால் தூண்டிக் கொள்ளும் ஆன்மா. அது அவரின் உடல் விருப்பங்களுக்கு ஏற்றவாறு செயல்படுகின்றது. இக்காரணத்தால் தீமைகளை கொண்டும் தீய செயல்களைக் கொண்டும், நல்லொழுக்கயில்லாமைக் கொண்டும் இதயம் நிறைகின்றது. பெரும்பாலான மனிதர்களின் நிலை இதுவேயாகும். இந்த ஆன்மா விஞ்ஞானத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிராக சிந்தனையில் மூழ்கியிருக்கின்றது. இக்காரணத்தால் திக்கிர் ஒளி வழங்கும் ஒரு விளக்காக திகழுகின்றது. இறையொளியை அதன்பால் (ஆன்மாவின் பால்) குவித்துக் கொள்ள அது ஆயத்தமாகயிருந்தாலும், தீமையின் பால் தூண்டிக் கொள்ளும் அந்த ஆன்மா அப்பிரகாசத்தை ஏற்றுக் கொள்வதில்லை. ஆகவே அந்த ஆன்மா முற்றிலும் இருளடைந்ததாகவே இருக்கின்றது.

## 2. அன்ந.்.ப்சுல் லவ்வாமா : சுயம் குற்றம் சாட்டும் ஆன்மா.

இது, இதய பிரகாசத்தைக் கொண்டு, மேலும் ஒளி நிறையும் ஆன்மாவாகும். அதாவது ஞாபகத்தைக் கொண்டும் மறதியைக் கொண்டும் கலவையாகயிருக்கும் ஒரு நிலையாகும் அது. அந்த ஆன்மா சுயம் தம்மை பாதுகாத்துக் கொள்ள முயற்ச்சிக்கின்றது. அல்லாஹ்விற்க்கும் அவன் படைப்பினங்களுக்கும் மத்தியில் அது அசைந்துக் கொண்டிருக்கும். ஆன்மாவின் பால் கெட்ட விஷயங்கள் வரும் பொழுதெல்லாம் அது சுயம் குற்றம் சாட்டிக் கொள்கின்றது. மட்டுமின்றி கவனமுடன் இருக்குமாறு வேண்டுகோளும் மனிதனுக்கு அது பகிர்கின்றது. அந்த ஆன்மா சுயம் வருந்திக் கொள்ளவும், தவறுகளை எண்ணி பட்சாதபித்துக் கொள்ளவும், இறைவனிடம் பாவ மன்னிப்புக்காக மன்றாடிக் கொள்ளவும் செய்கின்றது. அத்தோடு அந்த ஆன்மா, அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையேனுமாகிய அல்லாஹ்வின் வாசலின் முன் காத்திருக்கின்றது.

இக்காரணத்தால் அந்த ஆன்மாவை அல்லாஹ் மதித்துக் கொள்கின்றான். அதைக்குறித்து அல்லாஹ் கூறுகின்றான்.

**“நிந்தித்துக் கொண்டிருக்கும் ஆன்மாவின் மீதும் நான் சத்தியம் செய்கின்றேன்”** (75 : 3) அவ்வாறு நஃப்சுல் லவ்வாமா உடல் விருப்பங்களை வெறுத்துக் கொள்ளவும் குற்றகுறைவுகளைக் குறித்து சுயம் நிந்தித்துக் கொள்ளவும் செய்கின்றது. என்றிருந்தாலும் அதற்கு தம் உடல் விருப்பங்களை முழுமையாக கட்டுப்படுத்திக் கொண்டு, நற்செயல்களில் மட்டும் ஈடுபட்டுக் கொள்வதற்கு முடிவதில்லை. சிலவேளைகளில் உடல் விருப்பங்கள் அதிகரித்து நிற்பதால் அது அடிதவறி தவறுகளின் பால் வீழ்கின்றது. இந்நிலையிலான ஆன்மா சுயம் தவறுகளின் பால் வீழ்ந்துக் கொண்டாலும், அத்தவறுகளில் மூழ்கியிருக்காமல் ஒவ்வொரு தவறுகளுக்கு பின்னும் அது பாவமன்னிப்பை தேடிக் கொள்கின்றது. அதன் வாயிலாக அந்த ஆன்மா அமைதியின் அருகாமையில் எட்டி விடவும், தம் ஆத்மா எனும் மனையை மிக அழகான நிலையில் வடிவமைத்து சுத்தம் செய்வதற்கான முயர்ச்சிகளை மேற்க்கொள்ளவும் செய்கின்றது. முடிவில் ஒரு பிரத்தேகமான பிரகாசத்தால் அந்த மனை ஒளி நிறைந்துக் கொள்கின்றது. அது வழி அந்த ஆன்மா ஒரு உண்மையான மனையாக பரிணமிக்கின்றது. அவ்வகை ஆன்மாவில் எல்லாம் வல்ல இறைவன் இறங்கி கொள்ளவும் அது வாயிலாக பரம உண்மை அவருக்கு வெளிப்பட்டுக் கொள்ளவும் செய்கின்றது. பின்னர் ஒரு தூய ஆன்மா உற்பத்தியாகவும் அந்த ஆன்மா நிரந்தர அமைதியை அடையவும் செய்கின்றது.

**3.அன்நஃப்சுல் முத்மயின்ன : சாந்தியடைந்த ஆன்மா**

இந்த முன்னேற்ற கட்டத்தில் ஆன்மா எல்லா விதமான அழுக்குகளிலிருந்தும் மீட்சியைப் பெற்று ஆன்மீக வல்லமையுடையதாக மாறி விடுகின்றது. அந்நிலையில் அந்த ஆன்மாவுக்கு அல்லாஹ்விடம் திடமான ஒரு பந்தம் உருவாகி கொள்ளவும், அவனில்லாமல் வாழமுடியாத ஒரு சூழ்நிலையின்பால் அது சென்றடைந்திடவும் செய்கின்றது. மேலும் அந்த ஆன்மா முழுமையாக இதயத்திற்கு நேர் திரும்பிக் கொள்ளவும், நல்லொழுக்க தன்மைகளைக் கொண்டு இதயத்தை நிறைத்துக் கொள்ளவும், ஒரு தூய்மையான உலகை சென்றடைந்துக் கொள்ளவும், எல்லாவித அசுத்தமானவயிலிருந்து மீட்சியை பெற்றுக் கொள்ளவும் செய்கின்றது. அந்த ஆன்மா முழுமையாகவும் இறை கட்டுப்பாட்டின் வட்டாரத்திற்குள் இருக்கும். சாந்தியைக் கொண்டும் திருப்தியைக் கொண்டும் இந்த நிலையை அடைந்த ஆன்மாவிடம் இறைவன் கூறுகின்றான்.

**“சாந்தியடைந்த ஆன்மாவே! நீ உன்னுடைய இறைவன் பால் திருப்தி அடைந்த நிலையிலும் அவன் உன்மீது திருப்தி அடைந்த நிலையிலும் மீளுவாயாக. நீ என் நல்லடியார்களில் சேர்ந்து கொள்வாயாக. மேலும் நீ என் சொர்க்கத்தில் பிரவேசிப்பாயாக”** (89 : 28 – 31)

திக்கிறின் (இறையெண்ணங்களின்) விஷயம் இவையாகும். ஆன்மாவின் விஷயமும் இதுவே தான். இந்த விஷயங்களில் முன் செல்லும் வேளைகளில் நீங்கள் ஒவ்வொருவரும் மிக கடினமாக முயர்ச்சிகளை மேற்க்கொள்ள வேண்டும். அவ்வாறேயானால் உங்களுக்கு உன்னதமான இடத்தை எட்ட முடிந்துவிடும். இந்த இறைத்தூதரின் வருகையோடு அல்லாஹ்வின் நற்செய்திகளையும் ஒளியையும் பிரச்சாரம் செய்ய நீங்கள் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கின்றீர்கள். அல்லாஹ்விடம் உண்மையான பந்தத்தை வைத்துக் கொள்ள விரும்புகின்றோர்கள் என் இந்த உபதேசத்தை நிச்சயமாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நிச்சயமான வடிவில், சரியான நிலையில், இறை தியானத்தில் அவர்கள் மூழ்கிவிடட்டும். அவ்வாறேயானால் மறைந்திருக்கும் ஒரு உலகை அவர்களுக்கு அடைய முடிந்துவிடும். கொஞ்சம் கொஞ்சமாக அல்லாஹ் அவர்களுக்கு அனுமதித்தது படி அவ்வுலகை அவர்களுக்கு எட்ட முடிந்துவிடும். இவ்வாறு முன் செல்ல அல்லாஹ் உங்களை ஆயத்தமாக்குவானாக! அவனை நினைவு கூறுவதற்கு பரிபூரணமாக உங்களுக்கு முடிந்து விடட்டும். அவன்பால் செல்லும் உங்கள் வழி ஒளி நிறைந்ததாகட்டும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
Cell: 9789180817